STC 405/2024 நாள்.

18.10.2024

அ.சா. 1 திரு.லட்சுமிநாராயணன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

1) நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத தெரியும் படிக்க தெரியாது. எதிரிக்கு அனுப்பிய ஆங்கிலத்தில் உள்ள வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆங்கிலத்தில் உள்ள வழக்கறிஞர் அறிவிப்பில் பத்திகள் வாரியாக என்னனென்ன விவரங்கள் என்பது தற்போது எனக்கு தெரியாது. நான் அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு எதுவும் வரவில்லை. வழக்கறிஞர் நோட்டீஸ் வந்திருப்பதாக சொன்னார்.

2) 12.01.2024 ம் தேதி எதிரி பொன்னுசாமி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் பல்லடம் காவல் நிலையத்திற்கு வந்து என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரித்தார்கள். அந்த புகாரின் சங்கதி என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் எனக்கு கொடுக்க வேண்டிய 4 லட்சம் ரூபாய் அந்த சமயத்தில் கொடுக்க முடியாது என்றும் 10 மாதம் காலஅவகாசம் வேண்டுமென்று புகார் கொடுத்தார். அது தினமும் 250 கொடுப்பதாக உறுதி அளித்தார். 15 நாட்கள் கொடுத்தார் அதன்பின்பு கொடுக்கவில்லை. அந்த வரவு வைத்த நோட் எதிரி வசம் உள்ளது.

3) நான் வாடகைக்கு ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறேன் சொந்தமாக ஆட்டோ கிடையாது. குட்டி என்ற பெயரும் உள்ளது. என்னிடம் கடன் வாங்கும்போது ஒரு காசோலை, ஒரு புரோநோட், ஆட்டோவின் ஒரு ஆர்சி புக் ஆகியவற்றை கொடுத்து கடன் வாங்கினார். தற்போது மேற்படி ஆவணங்கள் அனைத்தும் என் வசம் உள்ளது. எதிரிக்கும் எனக்கும் சுமார் 2 வருடங்களாக வரவு செலவு செய்து வருகிறார்.

4) நான் கடனாக கொடுத்ததாக சொல்லப்படுகிற 4 லட்சத்தை வைத்து எந்த தேதியில் எங்கு வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என்பதை எனது புகாரிலோ, நிருபண வாக்கு மூலத்திலோ, அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சாட்சி புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பை பார்த்துவிட்டு ஆங்கிலத்தில் இருப்பதால் எனக்கு படிக்க தெரியாது என்று கூறுகிறார்.

5)எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் அவர் கொடுத்திருப்பார். செந்தில்இளங்கோவன் வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கும் எதிரியின் மனைவிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான் எதன் அடிப்படையில் அனுப்பினேன் என்றால் அவர்கள் என்னிடம் 20 ரூபாய் முத்திரைவில்லை ஸ்டாம்ப் பேப்பரில் எழுதிக் கொடுத்தார்கள் அதன் அடிப்படையில் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன்.

6) முதலில் செந்தில் இளங்கோவன் வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். பின்பு இந்த வழக்கில் அறிவிப்பினை அனுப்பினேன். ஒருவேளை வழக்கு காசோலைக்கான இதன்மூலமாக அதிக லாபத்திற்காக நான் செயல்படும் நபர் என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கறிஞரிடம்

போகவில்லை. தினசரி 250 ரூபாய் வாங்குவது என்பது வட்டி தொழில் செய்பவர்கள் மட்டும்தான் வாங்குவார்கள் என்றாலும் எதன் அடிப்படையில் அவ்வாறு பணத்தை வாங்கினேன் என்றால் எதிரியே மாதமாதம் வட்டி செலுத்தமுடியாது என்று சொல்லி தினமும் கொடுப்பதாக கூறி நோட்டு போட்டு பணத்தை கொடுத்தார் நான் வரவு வைத்து கொடுத்தேன்.

7) நான் கொடுத்த கடனிற்கு எத்தனை சதவீத வட்டி என்றால் 2 சதவீதம் வட்டி என்று வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன். மாதம் 8000 ஆயிரம் ரூபாய் வரும் ஆனால் எதிரி 7500/– மட்டுமே கொடுப்பார். நான் எந்த தேதியில் எதிரிக்கு கடன் கேட்டார் என்றால் 22.07.2022ம் தேதி கேட்டார். நான் ஒரு வாரத்தில் கொடுப்பதாக சொன்னேன். சாட்சி தற்போது 22ம் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக எதிரி கடன் கேட்டதாகவும் 22ம் தேதி கடன் கொடுத்ததாகவும் கூறுகிறார். சாட்சி தற்போது 22.07.2022 அல்ல என்றும் 07.07.2022ம் தேதி என்றும் கூறுகிறார்.

8) வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்திற்கும் மை வேறுபாடு உள்ளது என்றால் தெரியாது. காசோலையில் என்ன எழுதியிருக்கிறது என்பதும் எனக்கு தெரியாது. எந்த தேதியில் எதிரியை சந்தித்தேன் என்பதும் எந்த தேதியில் காசோலையை தாக்கல் செய்த விவரத்தையும் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் நான் எந்த காலத்திலும் பணத்தை திரும்ப கேட்கவில்லை. காவல்நிலையத்தில் வைத்து கேட்டேன். 15 நாட்கள் 250 கொடுத்ததாக சொல்லப்படுவதில் எந்த தேதியில் இருந்து எந்த தேதிவரை கொடுத்தார் என்ற விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் போனவருடம் 3 மாதம் கொடுத்தார். சாட்சி தற்போது இந்த வருடம் 3 வது மாதம் கொடுத்ததாக கூறுகிறார்.

9) இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு 2 வருடம் கழித்து கொடுத்தார் என்று சொன்னால் எனக்கு வருடம், மாதம் ஞாபகமில்லை 2024ம் வருடம் மார்ச் மாதம் வழக்கு காசோலையை வங்கியில் தாக்கல் செய்தேன். அதன்பிறகு தான் வழக்கை தாக்கல்செய்தேன் என்றால் சரிதான். பணம் கொடுத்த 2022ம் வருடத்திலிருந்து 19 மாத கால இடைவெளியில் எந்த இடத்திலும் எதிரியிடம் தொகையை கேட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. கேட்டேன் லோன் வாங்கி தருவதாக சொன்னார்.

10) புரோநோட், காசோலை, ஆர்சி புக் எந்த வருடத்தில் வாங்கினேன் என்றால் 2022ம் வருடம் வாங்கினேன். நான் காசோலை வாங்கியபோது கையொப்பம் மட்டும் செய்து எதுவும் நிரப்பப்படாமல் இருந்தது என்றால் சரிதான். புரோநோட் பூர்த்தி செய்து இருந்தது. புரோநோட்டில் கடன் வாங்கியதாக ஸ்டாம்பில் பொன்னுசாமி மட்டுமே கையொப்பம் செய்துள்ளார் என்றாலும் நான் அறிவிப்பில் அவரது மனைவியும் கடன் வாங்கியதாக அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். புரோ நோட்டில் எதிரியின் மனைவி கடன் வாங்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

11) புரோநோட்டை சாட்சி முகம்மது ஆரிப் என்றும் எழுதியது அற்புதராஜ்வீரன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது புரோநோட்டின் பின்புறம் முகம்மது ஆரிப்பின் புகைப்படம் இடதுபுறமாகவும் வலதுபுறமாக எதிரிமனைவியின் புகைப்படமும் கையெழுத்தும் உள்ளது என்றால் சரிதான். புரோநோட்டை காவல்நிலையத்தில் வைத்து வாங்கினேனா என்றால் பணம் கொடுக்கும்போது வீட்டில் வைத்து வாங்கினேன்.

12)புரோநோட்டில் உள்ள சங்கதிகள் யார் எழுதினார்கள் என்றால் அற்புதராஜ் வீரன்

அவரையும், முகம்மது ஆரிப் எனது பக்கம் சாட்சியாக விசாரிக்க எனது வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. காசோலையில் பெயர், தொகைகளை யார் எழுதினார்கள் என்றால் சிவக்குமார் என்பவர் எழுதினார் மேற்படி விவரத்தை அறிவிப்பிலோ, புகாரிலோ, வாக்கு மூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

13)2024ம் வருடம் மார்ச் மாதத்தில் காவல்நிலையத்தில் வைத்து 4,லட்சத்து 33 ஆயிரம் தருவதாக 20 ரூபாய் ஸ்டாம்பேப்பரில் எதிரியும் எதிரியின் மனைவியும் எழுதிக் கொடுத்தார்கள். காசோலையை எதன் அடிப்படையில் 5 லட்சம் என்று பூர்த்தி செய்தேன் என்றால் வட்டியுடன் சேர்த்து பூர்த்தி செய்துள்ளேன். காவல்நிலையத்தில் வைத்து 2024ம் வருடம் மார்ச் எதிரிகள் எழுதிக் கொடுத்த ஸ்டாம் பேப்பரை வைத்துதான் செந்தில் இளங்கோவன் வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கும் அவரது மனைவிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

14) இதற்கு முன்பாக எதிரியை தவிர பல்லடம் ஆட்டோ ஸ்டாண்டில் சில நபர்களிடம் தினசரி வரவு செலவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். 2 நபர்களிடம் கடன் கொடுத்து அதற்கு ஆவணங்கள் வாங்கி அவர்கள் செலுத்தியபின்பு அவர்களிடம் கொடுத்துள்ளேன். நான் செய்யும் வரவு செலவு செய்வதறகு ஆவணங்கள் எதுவும் வைத்துள்ளேனா என்றால் தனிப்பேப்பரில் எழுதி வைத்துக்கொள்வேன் அவர்கள் தனிப்பேப்பரில் எழுதி வைத்துக்கொள்வார்கள். எதிரிக்கும் எனக்கும் இந்த வழக்கு தொடர்பான பரிவர்த்தனைக்கு பராமரித்த பேப்பரை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

15)எதிரி தனிப்பட்டு எழுதி வைத்திருக்கும் எந்த தேதியில் இருந்து எந்த தேதிவரை எழுதி வைத்திருக்கிறார் என்றால் 3ம் மாதத்தில் 10 நாட்கள் கொடுத்தார். எதிரி என்னிடம் 19 மாத காலம் எந்த பரிவர்த்தனையும் நடத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பு எதிரியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன் எந்த தேதி என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் நகல் கொடுத்துள்ளேன்.

16) நான் கடன் கொடுத்த தொகை எந்த வருமானத்தின்மூலமாக வந்தது என்று வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்கு மூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு தொகையை எதிரிக்கு கொடுக்கும் அளவிற்கு நான் வருமானம் உள்ள நபர் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சீட்டு போட்ட பணமும், இடம் விற்ற பணத்தையும் வைத்து கொடுத்தேன். மேற்படி விவரத்தை நான் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை.

17) காசோலை திருப்பப்பட்ட விவரம் வங்கியில் கேட்டபோது பணமில்லை என்ற விவரத்தை சொன்னார். நான் பேசன்ஜர் ஆட்டோ ஓட்டி வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன் என்பதற்கும் எதிரியுடன் சேர்ந்து தொழில் செய்து வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எனக்கு சுகர் இருப்பதால் வண்டி ஓட்டும் வேலைக்கு செல்லவில்லை. நான் இடம் விற்கும் புரோக்கர் வேலை செய்து வருகிறேன். நான் ஆட்டோவை விற்றுவிட்டேன். TN 45 6425 என்ற ஆட்டோவை எனது அக்கா வாங்கி கொடுத்தார். இந்த ஆட்டோவை ஓட்டும்போதுதான் எதிரியுடன் பழக்கம் ஏற்பட்ட விவரத்தை வழக்கறிஞர்

அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

18) உண்மையில் நான் பேசன்ஜர் ஆட்டோவை தொழில் செய்யவில்லை என்றாலும் தினசரி வரவு செலவு செய்யும் தொழில் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. அதனடிப்படையில் எதிரி என்னிடம் சிறு தொகை வாங்கி திரும்ப செலுத்தி விட்டார் என்றாலும் எனக்கு இருக்கும் அரசியல் பலத்தை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு அரசியல் சார்ந்த நபர்களுடன் சென்றேன் என்றால் சரியல்ல. நான் மட்டும் தனியாக சென்றேன்.

19) எதிரி கடனை திரும்ப செலுத்திய பின்னரும் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றாலும் சரியல்ல. கடந்த 2024 வருடம் மார்ச் மாதம் காசோலை பணமாக்க தாக்கல் செய்ய சொன்னதற்கு பின்பு நான் 14.12.2023 ம் தேதி காசோலையை பணமாக்க வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA
Digitally signed by K CHITHRA
Date: 2024.10.18 20:01:25 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.